என்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறது. அதனுடைய தலைவரை அண்மையில் கல்வித் துறையின் செயலர் அவர்கள் சந்தித்து, இந்த மாணவ மாணவியர் தேர்வு எழுதுவது குறித்து விவாதித்து, இதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டுமென்று தெரிவித்தபொழுது, 'இதுகுறித்துக் கடிதம் எழுதுங்கள், ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்', என்ற வாய்மொழிச் செய்தியைத் தெரிவித்ததாக என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இது தொடர்பாகக் கல்வித் துறைச் செயலர் அவர்கள் என்.சி.டி.இ., தலைவருக்குக் கடிதம் எழுத இருக்கிறார்கள். அங்கிருந்து கிடைக்கின்ற பதிலின் அடிப்படையிலே உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

இப்பொழுது தேர்வு எழுத இயலாமல் இருக்கின்ற மாணவ மாணவியருக்கு இந்த ஆண்டிலே தேர்வு நடத்த உடனடியாக இயலாவிட்டாலும், மிக விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் கொடுக்கவில்லையே. (குறுக்கீடு) கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தால் 55-ல் முறைப்படி வரும். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு கொடுத்தது பிறகு வரும். (குறுக்கீடு) அது இன்றைக்கே வர வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) தொகுதி சம்பந்தப்பட்டது, எடுத்திருக்கிறேன். 55-இலே கொடுத்தது, (குறுக்கீடு) பதில் வந்தவுடன் வைக்கப்படும். இன்றைக்குப் பதில் வந்திருக்கிற பிரச்சினைகள் அவையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து பதில் வருகிறபொழுது உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினை குறித்து பதில் வந்தவுடன் வைக்கிறேன். (குறுக்கீடு) கூட்டுறவு நூற்பாலை பற்றி இங்கே மற்றவர்கள் பேசி, அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அறந்தாங்கியா ? உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களுக்கான ஆட்சிக் குழு, ஆட்சி மன்றப் பேரவை, நிர்வாகக் குழு ஆகியவைகளுக்கு அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப் பெற்றுள்ளன.

அண்ணா பல்கலைக் கழகம், சென்னை.

ஆட்சிக் குழு

திரு. வெ. பாலசுப்பிரமணியன்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

ஆட்சிமன்றப் பேரவை

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. த. ரத்தினவேல்

மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை.

ஆட்சிமன்றப் பேரவை

திரு. கே. தவசி,

திரு. எஸ்.வி. சண்முகம்

திருமதி பி. நிர்மலா

திரு. ஏ. தெய்வநாயகம்

பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

ஆட்சிமன்றப் பேரவை.

திரு. இராம. இராமநாதன்

திருமதி ஜெ. லோகாம்பாள்

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

ஆட்சிமன்றப் பேரவை

திருமதி ரெ. சியாமளா

திருமதி ரமணி நல்லதம்பி

[பேரவைத் தலைவர்] [1994 நவம்பர் 10

வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.

நிர்வாகக் குழு

திரு. ப. பெரியசாமி

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெரியசாமி என்று நினைத்துக் கொண்டு ஒலி எழுப்புகிறீர்கள். அந்தப் பெரியசாமி. (சிரிப்பு) தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கிறேன்.

முற்பகல் 11-40

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிற உங்களுடைய அறிவிப்பு என்னிடத்திலே வந்திருக்கிறது. நான் முறைப்படி விதி 55-இன் கீழ் பதில் வர, வர, வைத்திருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: போன செஷனிலே கொடுத்தது. இந்த செஷனிலேயும் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போன செஷனிலே கொடுத்து, நீங்கள் இங்கே இல்லையென்றால் உங்களுடைய அறிவிப்பு காலாவதியாகிவிடும். நீங்கள் கொடுத்துவிட்டு, நீங்கள் இங்கே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது, அந்த அறிவிப்பே காலாவதியாகிவிடும். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் உங்களுக்குத் தரப்படும். (குறுக்கீடு) தரப்படும். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரு வருடமாகிறது கொடுத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வருடம் முன்பு கொடுத்தது அல்ல. (குறுக்கீடு) இந்தப் பேரவைக் கூட்டம் தொடங்கியவுடன்

1994 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

கொடுத்ததைக்கூட இப்போது கேட்கலாம். *(குறுக்கீடு)* இந்த பேரவை ஆரம்பித்ததும் கொடுத்த அறிவிப்பு இருக்கிறது. அந்த அறிவிப்புக்கு முறையான பதில் வந்தவுடன் உங்களுக்குத் தரப்படும். *(குறுக்கீடு)* மேற்கொண்டு இதன்மீது என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடு)* வெளியேற்றட்டும் என்று எண்ணியே அதனை நீங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்க முடியாது. *(குறுக்கீடு)* இல்லை கடைசி நாள் நம்மை வெளியேற்றட்டும் என்பதற்காகவே, 11 மணிக்கு வந்து கேட்கக் கூடாது. *(குறுக்கீடு)* அப்படியானால், என்னுடைய அறைக்கு நீங்கள் காலை 10 மணிக்கு முன்னரேயே வந்து என்னிடத்திலே கேட்டிருக்கலாம். அதுதான் முறை. *(குறுக்கீடு)* முறை தவறி நடப்பது சரியல்ல. *(குறுக்கீடு)* திருநாவுக்கரசு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தக் கூடாது. உட்காரவும். *(குறுக்கீடு)* உட்காரவும். *(குறுக்கீடு)* அவை நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடாது. உட்கார வேண்டும். உட்காரவும். *(குறுக்கீடு)* உட்காரவும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஸ்பெஷல் மென்ஷனாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஸ்பெஷல் மென்ஷன்' என்றால், என்னிடத்தில் வந்து எழுதிக் கொடுக்க வேண்டும். *(குறுக்கீடு)* ஏன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் உட்கார வேண்டும்; அல்லது வெளியேற வேண்டும். திருநாவுக்கரசு, அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தாமல் உட்கார வேண்டும்; அல்லது வெளியேற வேண்டும். *(குறுக்கீடு)* திருநாவுக்கரசு, அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேற வேண்டும்; திருநாவுக்கரசை அவையை விட்டு வெளியேற்ற மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடு)* திருநாவுக்கரசை அவையைவிட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன். 11 மணிக்கு மேலே வருவது, வந்தவுடன் அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது, *(குறுக்கீடு)* ஜீரோ ஹவர் இல்லை. *(குறுக்கீடு)* அறிவிப்புக் கொடுக்காமல் எப்படி எழுப்ப முடியும்? *(குறுக்கீடு)* முறைகேடாக நடப்பதையே தன்னுடைய வாடிக்கையாகக் கொண்டிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? *(குறுக்கீடு)* முறைகேடாக நடந்து கொண்டேயிருந்தால், நீக்க வேண்டிதான் வரும். முறைகேடாக நடந்து கொண்டிருக்கிற ஒருவரை நீக்க வேண்டிதான் வரும். *(குறுக்கீடு)* முறைகேடாகவே ஒரு மனிதர் நடந்து கொண்டிருந்தால் நீக்க வேண்டியதுதான். இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. அவரை அப்புறப்படுத்தவும்.

(உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு, பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

திரு. திருநாவுக்கரசு இந்த முறையும் சேர்த்து, இரண்டு முறை அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டிருக்கிற சூழ்நிலையில், பேரவை விதி 120-இன்படி, இந்தக் கூட்டத் தொடர் முடியும்வரை, அவைக்கு வரக் கூடாது; இன்னும் அவர் தொடர்ந்து முறைகேடாகவே நடந்து கொள்வேன் என்கிற முனைப்போடு வந்த காரணத்தினால், இந்தக் காலகட்டத்தில், இந்தப் பேரவை வளாகத்திற்குள்ளேயே அவர் நுழையக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி பகுதியிலுள்ள சாயப்பட்டறை கழிவு நீரால் பவானி ஆறும், குடிநீர்த் திட்டங்களும் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. செல்வி. எல். சுலோசனா, திரு. வெ. பழனிசாமி, டாக்டர். மு. சீனியம்மாள், திரு. கே. செல்வராஜ், திரு. ஜி. பழனிசாமி ஆகியோருள் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். செல்வி எல். சுலோசனா.

செல்வி. எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, பவானி ஆற்றங்கரையோரம் தேக்கம்பட்டி கிராமப் பகுதியில் அமைந்துள்ள சாயப் பட்டறையிலிருந்து (டையிங் பேக்டரி) வெளியேறும் கழிவு நீரினால் ஆறு, குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தற்போது மேட்டுப்பாளையம் பகுதியில் மூன்று சாயத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஒரு தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் செய்ய ஆரம்பித்துள்ளது.